# வணிகவரித்துறை

## மானியக் கோரிக்கை எண். 10

# வணிகவரிகள்
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2002 – 2003

**திரு. செ. ம. வேலுசாமி**
**தொழில் மற்றும் வணிகவரித்துறை அமைச்சர்**

(c)
தமிழ்நாடு அரசு 2002

## வணிகவரித் துறை
## மானியக் கோரிக்கை எண். 10
## வணிக வரிகள்
## கொள்கை விளக்க குறிப்பு
## 2002–2003

### 1. முன்னுரை

1.1 வணிகவரிகள் தமிழக அரசுக்கு மிக அதிகமான வரி வருவாயை ஈட்டித் தருகிறது. சமூக நலம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்காக பெருகிவரும் தேவைகளை பூர்த்தி செய்கின்றவகையில், தமிழக அரசின் வரிவிதிப்பு கொள்கையானது அதிகமான வருவாயை திரட்டுவதோடு, ஏற்கனவே அதிகமான வரி வீதத்திற்குட்பட்ட பொருட்கள் மீது மேலும் வரிச்சுமையை அதிகரிக்காத முறையில் வரி ஆதார அடிப்படையை விரிவுபடுத்தும் நோக்கம் கொண்டது. அதேசமயம் பொதுமக்கள் அதிக வரிச் சுமைக்கு ஆளாகாதவாறும் கவனம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவ்வரசின் முழு வரிவிதிப்பு கொள்கையானது, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை துரிதபடுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டது.

### 1.2 வணிகவரித்துறையால் நிருவகிக்கப்படும் சட்டங்கள்.

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம்,1959
2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி சட்டம், 1970
3. மத்திய விற்பனை வரிச்சட்டம், 1956
4. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச்சட்டம், 1939
5. தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச்சட்டம், 1961
6. தமிழ் நாடு பந்தய வரிச்சட்டம், 1935
7. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981

8. தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச்சட்டம், 1990
9. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983
10. தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச்சட்டம், 2001

## 2. துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்

செயலாக்க அளவில், வணிகவரித் துறையானது வணிகவரி ஆணையரின் தலைமையில் செயல்படுகிறது. ஆணையருக்கு உதவியாக தலைமையகத்தில் இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் கொண்ட குழுக்கள் செயல்படுகின்றன. இத்துறையில், 10 வணிக வரி கோட்டங்களும், ஒரு இடைமாநில புலனாய்வு குழுவை உள்ளடக்கிய 8 செயலாக்க கோட்டங்களும் உள்ளன.

### 2.1 வரிவிதிப்பு பிரிவு

இத்துறை நிருவகிக்கும் பல சட்டங்களின் கீழ் வரிவிதிப்பு, கேட்பு மற்றும் வசூல் பணிகளை கவனிக்க மாநிலத்தில் 10 வணிக வரி கோட்டங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் துணை ஆணையர் தலைமையில் செயல்படுகின்றது. இக்கோட்டங்கள், மேலும் 40 வணிகவரி மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன; சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள வணிக வரி மாவட்டங்கள் சரகம் என அழைக்கப்படுன்றன. மேலும் 6 விரைவு வழி வரி விதிப்பு வட்டங்கள் உள்ளிட்ட (உதவி ஆணையரின் தலைமையில், 4 சென்னையியிலும், 2 கோயம்புத்தூரிலும்) 323 வரி விதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றில் 6 வரிவிதிப்பு வட்டங்கள் உதவி ஆணையர்கள் தலைமையிலும், 236 வரி விதிப்பு வட்டங்கள் வணிக வரி அலுவலர் தலைமையிலும், மற்றும் 81 வரிவிதிப்பு வட்டங்கள் துணை வணிக வரி அலுவலர் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன.



### 2.2 தணிக்கைப் பிரிவு

வரிவிதிப்பு துறையில் உள்ளீட்டுத் தணிக்கைப் பிரிவு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இதற்கென 40 உள்ளீட்டு தணிக்கை குழுக்கள் கொண்ட உள்ளீட்டு தணிக்கைப் பிரிவு ஒன்று உள்ளது. வரி விதிப்பு தொடர்புடைய பதிவுகள் அனைத்தும் உள்ளீட்டுத் தணிக்கை மற்றும் மாநில கணக்காயர் குழுவினரால் தணிக்கை செய்யப்படுகின்றன. உள்ளீட்டுத் தணிக்கை மற்றும் மாநிலக்கணக்காயர் தணிக்கைக் குழுவின் அறிக்கைகள் மீதான தொடர் நடவடிக்கையினை கண்காணிக்க ஒரு தனிக் குழு வணிக வரி ஆணையர் அலுவலகத்திலுள்ள இணை ஆணையர் (தணிக்கை) அவர்களின் கண்காணிப்பின் கீழ் செயல்பட்டு வருகிறது. 2001–2002 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2002 முடிய) பணித்திறன் கீழ்கண்டவாறு உள்ளது:–

| | 2001–2002 ( பிப்ரவரி2002 முடிய) | | |
|---|---|---|---|
| | பழையன | புதியன | மொத்தம் |
| உள்ளீட்டு தணிக்கை குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளின் எண்ணிக்கை | 29,962 | 35,206 | 65,168 |
| உள்ளீட்டு தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளில் நிவர்த்தி செய்யப்பட்ட வற்றின் எண்ணிக்கை | 18,198 | 16,633 | 34,831 |
| மாநில கணக்காயரின் தணிக்கை குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டு நிலுவையிலுள்ள பத்திகளின் எண்ணிக்கை | 13,365 | 3,549 | 16,914 |
| நிவர்த்தி செய்யப்பட்ட பத்திகளின் எண்ணிக்கை | 2,204 | 338 | 2,542 |

2.3 செயலாக்கப் பிரிவு

வரி ஏய்ப்பினை தடுக்கும் பொருட்டு செயலாக்கப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. இப் பிரிவிலுள்ள, 7 கோட்டங்களில், 7 துணை ஆணையர்களும், 10 உதவி ஆணையர்களும் மற்றும் 15 வணிக வரி அலுவலர்களும் உள்ளனர். செயலாக்கப் பிரிவில் 29 வணிக வரி தணிக்கைச் சாவடிகளும், 48 சுற்றும் படைகளும் உள்ளன. மேலும் ஒரு துணை ஆணையர் தலைமையிலான இடை மாநில புலனாய்வு குழுவும் செயல்பட்டு வருகிறது. செயலாக்கப்பிரிவு, கடைகள், திரையரங்குகள் போன்றவற்றை ஆய்வுசெய்வது, வாகனங்களை சோதனையிடுவது போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

## 3 மேல் முறையீட்டு மன்றங்கள்

3.1 முதல் மேல் முறையீட்டு அமைப்பு

மேல்முறையீட்டின் முதற்கட்டமாக, 20 மேல்முறையீட்டு உதவி ஆணையர்களும் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒருவருமாக 2 மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் உள்ளனர். இவர்கள் விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத் தலைவரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றனர்.

2001–2002 ஆம் ஆண்டில் மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்களால் தீர்வு செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை 14556 ஆகும்.

3.2 விற்பனை வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம்

விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டுத் துணை ஆணையர்கள் ஆகியோர்களின் தீர்ப்புகளின் மீது எழும் மேல் முறையீடுகளை விசாரிக்கிறது.



இத்தீர்ப்பாயம் 4 விற்பனை வரி நடுவர் ஆயங்களாக செயல்பட்டு வருகின்றது. முதன்மை ஆயம் சென்னையிலும் மற்றும் 3 கூடுதல் ஆயங்கள் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலும் உள்ளன.

சென்னையில் உள்ள முதன்மை ஆயத்திற்கு, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி, தீர்ப்பாயத் தலைவராகவும், இணை ஆணையர் தரத்தில் ஒருவர் துறை உறுப்பினராகவும் மற்றும் இந்திய தணிக்கை மற்றும் கணக்கியல் துறையை சார்ந்த ஒருவர் இரண்டாம் உறுப்பினராகவும் உள்ளனர். கூடுதல் ஆயங்கள், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ள கூடுதல் நீதிமன்ற உறுப்பினரை தலைவராகவும், கூடுதல் துறை உறுப்பினராக துணை ஆணையர் நிலையில் ஒருவரையும் கொண்டு இயங்குகின்றன. 2001–2002 ஆம் ஆண்டில் இத்தீர்ப்பாயங்களால் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 3831 ஆகும்.

3.3 தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம்

தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. இத்தீர்ப்பாயம் தலைவர், உப தலைவர், நீதித்துறை உறுப்பினர் மற்றும் நிருவாக உறுப்பினர் ஆகியோர் அடங்கியது. 2001–2002ஆம் ஆண்டில் இத்தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை முறையே 1613 மற்றும் 446 ஆகும்.

## 4. வணிகவரி பணியாளர்கள் பயிற்சி மையம், சென்னை

வணிகவரித்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக வணிக வரி பணியாளர் பயிற்சி மையம் 1982ல் தொடங்கப்பட்டு சென்னையில் இயங்கி வருகிறது. இந்த பயிற்சி மையம் வரி நிர்வாகம் குறித்த நினைவுகூர் பயிற்சிகள் மற்றும் சிறப்பு விரிவுரைகளை அளிக்கிறது. மேலும், இம்மையம் கணினி

மற்றும் மதிப்பு கூட்டு வரிவிதிப்பிற்கான பயிற்சிகளை அளிக்கிறது. இப்பயிற்சி மையம், ஒரு துணை ஆணையர் தலைமையில் இரண்டு உதவி ஆணையர்கள் மற்றும் ஒரு வணிகவரி அலுவலருடன் ஆசிரியர் குழுவாக இயங்கி வருகின்றது. கணினி பயிற்சி பிரிவு ஓர் உதவி புள்ளி விவர இயக்குநர் தலைமையில் செயல்படுகிறது.

**பயிற்சி மையத்தின் செயல்பாடுகள் கீழ்வருமாறு :–**

| பயிற்சி திட்டத்தின் பெயர் | பயிற்சிகளின் எண்ணிக்கை | பயிற்சி அளிக்கப்பட் அலுவலர்கள் | 2000–2001 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை | 2001–2002 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| பணியிடை பயிற்சி | 5 | வணிகவரி அலுவலர் | 91 | 77 |
| | | துணை வணிக வரி அலுவலர் | 18 | 59 |
| | | உதவி வணிக வரி அலுவலர் | 61 | 76 |
| கணினி பயிற்சி | 42 | வணிக வரி அலுவலர் | — | 83 |
| | | துணை வணிக வரி அலுவலர் | — | 82 |
| | | உதவி வணிக வரி அலுவலர் | — | 85 |
| | | உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் | 700 | — |

## 5. வருவாய் வசூல் நிலவரம்

**5.1** 2000–2001 ஆம் நிதியாண்டின் மொத்த வரி வசூல் ரூ 8663.72 கோடி. 2001–2002 ஆம் நிதியாண்டில் மொத்த வசூல் ரூ 8904.68 கோடியாகும். கடந்த 5 ஆண்டுகளில்



இத்துறை சம்பந்தப்பட்டஅனைத்து சட்டங்களின் கீழ் வரப் பெற்ற வருவாயின் விவரங்கள் பின் வருமாறு :–

| வரிசை எண் | சட்டத்தின் பெயர்கள் | வரிவருவாய் (ரூபாய் கோடியில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1997–1998 | 1998–1999 | 1999–2000 | 2000–2001 | 2001–2002 |
| 1. | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 | 4963 | 5455 | 6185 | 7354 | 7541 |
| 2. | மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 | 707 | 779 | 813 | 862 | 904 |
| 3. | தமிழ்நாடு கேளிக்கைள் வரிச் சட்டம், 1939 | 109 | 91 | 86 | 74 | 68 |
| 4. | தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935 | 7 | 5 | 5 | 6 | 6 |
| 5. | தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981 | 65 | 69 | 71 | 92 | 89 |
| 6. | தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம், 1990. | 213 | 183 | 221 | 276 | 297 |

தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச்சட்டம் 2001, 1.12.2001 முதல் அமலுக்கு கொண்டுவரப்பட்டு 6 பொருட்கள் மீது நுழைவு வரி விதிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் பிப்ரவரி 2002 வரை கிடைத்த வருவாய் ரூ.1841.36 இலட்சம்.

## 6. வணிகவரித் துறையின் வருவாய் மற்றும் செலவினம்

(ரூபாய் கோடியில்)

| வருடம் | வருவாய் | செலவினங்கள் |
|---|---|---|
| 1997–98 | 6063 | 68.65 |
| 1998–99 | 6583 | 92.42 |
| 1999–2000 | 7381 | 99.76 |
| 2000–2001 | 8664 | 98.57 |
| 2001–2002 | 8905 | 84.07 ( பிப்ரவரி 2002 முடிய) |

## 7. சமச்சீர் வரி விதிப்பு விகிதங்கள்

1999, நவம்பர் திங்களில் புது டில்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில், சமச்சீர் வரிவிதிப்பு முறையை கடைபிடிக்க வேண்டுமென ஒப்புக் கொள்ளப்பட்டது. இது வரிசீரமைப்பின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டது.

7.1 தமிழ்நாடு அரசு, 40 பொருட்கள் மீது 23.1.2000 அன்றும், 25 பொருட்கள் மீது 18.8.2001 அன்றும் மற்றும் 4 பொருட்கள் மீது 1.12.2001 அன்றும் விற்பனை வரி விகிதத்தை, சமச்சீர் வரிவிகித முறைக்கு இணக்கமான வகையில் மாற்றி–யமைத்துள்ளது.



## 7. 2 மதிப்பு கூட்டு வரி ( VALUE ADDED TAX - VAT)

அதிகாரம் அளிக்கப்பட்ட மாநில நிதி அமைச்சர்கள் குழு அண்மையில் எடுத்த முடிவின்படி, அனைத்து மாநிலங்களும் 1.4.2003 முதல் மதிப்பு கூட்டு வரி முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். மேற்கண்ட பரிந்துரைக்–கிணங்க, வணிக வரி ஆணையர் அலுவலகத்தின் வலை தளத்தில் (Website), மதிப்புக் கூட்டு வரி செயல் படுத்துதல் குறித்த ஆலோசனைகளை வழங்கக் கோரி "ஒரு விவாதக் குறிப்பு" வைக்கப்பட்டுள்ளது.மேலும்,இதுகுறித்து வணிக வரித் துறை அலுவலர்களுக்கும் மற்றும் வணிகர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. இதுவரை, 7 இணை ஆணையர்களுக்கும், 16 துணை ஆணையர்களுக்கும், 38 உதவி ஆணையர்களுக்கும் மற்றும் 5 வணிகவரி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மதிப்பு கூட்டு வரி முறையினை செயல்படுத்துவதற்கான ஆயத்த நிலையை கருத்தில் கொண்டு 2002–2003 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. மதிப்பு கூட்டு வரிமுறையானது, குறைந்த வரிவிதிப்பு விகிதங்கள், ஒவ்வொரு நிலையிலும் கட்டிய வரியை ஈடுகட்டுதல் அல்லது பலமுனை மதிப்பு கூட்டு வரிவிதிப்பு போன்றவற்றை உள்ளடக்கியதாகும். மதிப்பு கூட்டு வரியின் கீழ் விதிக்கப்படவிருக்கும் வரிவிகிதங்களானது,

அ) விலக்களிக்கப்பட்ட சில இனங்களின் பட்டியல்;

ஆ) 4 விழுக்காடு வரிவிதிக்கப்படும் சில அடிப்படைத் தேவைக்கான பொருட்கள் மற்றும் தொழில் உள்ளீட்டு பொருட்கள்;

இ) ஒரு விழுக்காடு தளவரிக்குட்படும் தங்கக்கட்டிகள் மற்றும் தங்க ஆபரணங்கள் மற்றும் ;

ஈ) வருவாய் சமநிலை வரி விகிதம் ஆகியன.

மதிப்பு கூட்டு வரியின் கீழ் பெட்ரோலியம் பொருட்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபானங்கள் மற்றும் கரும்பு ஆகிய பொருட்கள் உட்படவில்லை. இருப்பினும், வரிவிலக்கு அளிக்கப்படும் இனங்கள் கட்டுக்குள் இல்லாவிடில் வருவாய் சமநிலை வரி விகிதம் (RNR) அதிகமாக இருக்கும். மதிப்பு கூட்டு வரி விதிப்பு முறைக்கு விரைவில் மாறவிருப்பதை கருத்தில் கொண்டு இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் தயாரிப்பதற்கான (எரிபொருள் நீங்கலாக) படிவம் 17 கொடுத்து வாங்கப்படும் வரி செலுத்தப்பட்ட உள்ளீட்டு பொருட்கள், உறுப்புகள் மற்றும் உதிரி பாகங்களின் மீது செலுத்தப்பட்ட வரியை முழுமையாக ஈடுகட்டிக் கொள்ளலாம். (Full-Set off) 10 விழுக்காடு வரிவிதிப்புக்கு உட்பட்ட காகிதம், இயந்திரத்தில் செய்யும் தீப்பெட்டி, அச்சிடப்பட்ட பொருட்கள் (பேப்பர் மற்றும் இங்க் மட்டும்) 12 விழுக்காடு வரிவிகிதத்திற்கு உட்பட்ட மின் மற்றும் மின்னணு பொருட்கள், கையினால் செய்யப்படும் சோப்புகள். மறு விற்பனை மீது வரி விதிக்கவும் மற்றும் 8 விழுக்காடு வரி விகிதபகுதியை கலைக்கவும், வழி வகுக்கப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட பொருட்களுக்கு அளிக்கப்பட்டிருந்த வரிவிலக்கு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

## 8. <u>வரி விகிதத்தில் மாற்றங்கள்</u>

**8.1** அரிசி மற்றும் கோதுமைக்கு 2 விழுக்காடு வரி (இருப்பினும், பொது விநியோக முறை விற்பனைக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது)

- வெல்லம், மிளகு, பருப்பு வகைகள், சித்தா மற்றும் யுனானி மருந்துகள், சாம்பிராணி, உடனடி சாம்பிராணி, தைக்கப்பட்ட கைக்குட்டைகள், மீள் சக்தி சேமிப்பு கருவிகள் (சூரிய சக்தியால் இயங்கும் சமையற் கருவிகள், நகர கழிவுகளை எரிசக்தியாக மாற்றியமைக்கும் சாதனங்கள், எரி சக்தி சேமிக்கும்



அடுப்புகள் (Chulas) நீங்கலாக), துணிக்கழிவுகள் மற்றும் தேங்காய் துருவல் மீதான பொருட்களுக்கு 4 விழுக்காடு வரி.

- அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பெட்ரோலிய பொருட்கள், அறிவிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் இணக்க விகித வரி செலுத்தும் வணிகர்களுக்கும் மறு விற்பனையில் வரிவிலக்கு. அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் அறிவிக்கப்பட்ட பொருட்களுக்கு உபரிவரியிலிருந்து விலக்கு.
- அலுமினியம், பாக்கு, முந்திரி, சிமெண்ட் தரைக் கற்கள், சாயங்கள், மைகள் (எழுதும் மையை தவிர) பி.வி.சி குழாய்கள், நீள் குழாய்கள் மற்றும் பொருத்திகள், அச்சிட்ட பொருட்கள், இயந்திரத்தினால் செய்யப்பட்ட தீப்பெட்டிகள், மருந்துகள், போட்டோ ஆல்பங்கள், இரப்பர், தையல் இயந்திரங்கள், தட்டச்சுகள் மற்றும் மரங்கள் முதலியவற்றிக்கு 8 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக வரி உயர்வு.
- கூடுதல் வரி விதிப்பிலிருந்து அரிசி, கோதுமை, பருப்பு வகைகளுக்கு விலக்களிக்கப்படுகிறது.
- உடற்கட்டமைப்பிற்கான சாதனங்கள் உள்ளடங்கிய உடற்பயிற்சி பொருட்கள் மற்றும் சாதனங்கள், எண்ணெய் ஒட்டாத பாத்திரங்கள் மற்றும் தொலைக்காட்சி வானலை வாங்கிகள் ஆகியவற்றின் மீதான 4 விழுக்காடு வரி 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.
- வீட்டு உபயோக பாத்திரங்கள் தவிர்த்த உலோக பாத்திரங்கள், அழுத்த மற்றும் சூடு எதிர்ப்புச் சமையற் பாத்திரங்கள், மின் விசிறிகள், மின்னணுவால் இயங்கும் பொருட்கள், டம்பர்கள் (Dumpers) மற்றும் மண்வாரி இயந்திரங்கள் ஆகியவற்றின் மீதான வரி 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

- மின் மற்றும் மின்னணு பொருட்களை மறுவகைப்படுத்தும் முயற்சியாக, கணினி மற்றும் கணினி புற உறுப்புக்கள், மென் பொருட்கள் மற்றும் அறிவிக்கை செய்யப்பட்ட மின்னணு பொருட்கள் மீது 4 விழுக்காடு வரியும், அனைத்து மின் மற்றும் மின்னணு பாகங்கள், துணைப்பொருட்கள் மின் சக்தி மற்றும் மின் கடத்து மின்னியல் உறைகலன்கள் (Power and Shunt Capacitors) ஆகியவை மீது 10 விழுக்காடு வரியும், இதர மின் மற்றும் மின்னணு பொருட்கள் மீது 12 விழுக்காடு வரி விகிதம் என மாற்றியமைக்கப்படுகிறது.
- சில இறக்குமதி பொருட்களுடன் வேறுசில பொருட்களும் 11–வது அட்டவணையில் சேர்க்கப்படுகிறது.

## 8.2 குறைக்கப்பட்ட வரி விகிதங்கள்

- மூங்கில், புட்டி மூடிகள், வணிகச் சின்னமிடாத மிட்டாய்கள் மற்றும் தின்பண்டங்கள், வணிகச் சின்னமிடாத கேக் மற்றும் ஐஸ்கிரீம் உள்ளிட்ட வணிகச் சின்னமிடாத உணவு பொருட்கள், பருத்தி நூல் கழிவு, கைவினைப் பொருட்கள், பளிச்சீடு செய்யப்பட்ட சணற் பைகள், பனைக் கொழுப்பு அமிலம், வெளுப்புத் திரவம், உயரடர்த்தி பாலி எத்தீலின் (HDPE) மற்றும் பாலி பொரபலின் (Poly Propylene) ஆகியவற்றால் நெய்யப்பட்ட துண்டுப்பட்டைகள் மற்றும் துணி, குடைகள், தகரக் கொள்கலங்கள், இலகு மேற்கூரைத்தகடுகள் மற்றும் பதிவு பெறாத பிஸ்கட்டுகளின் மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது.
- அனற்பொறியூட்டும் செருகிகள் (Spark Plug) மீதான வரி 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்பட்டு உள்ளது.
- ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் மீதான வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்பட்டு உள்ளது.



- பதிவுப் பெறாத வணிகச் சின்னமுடைய அனைத்து விதமான வறுவல்கள் (Chips) மீதான 16 விழுக்காடு வரி 10 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது.

## 8.3 வரிவிலக்கு அளிக்கப்பட்ட இனங்கள்

- முன்னதாக 4 விழுக்காடு வரிவிதிப்பிற்குட்பட்டிருந்த பருத்திக் கொட்டைப் பொட்டு, வேப்பம் பிண்ணாக்கு, மீன்பிடி வலை, இரப்பர் விளையாட்டு பலூன்கள்;
- வணிகச் சின்னமிடாத வெண்ணெய் (முன்னர் கடைசிக்கட்ட கொள்முதலில் வரிவிலக்கு)
- முன்னதாக 12 விழுக்காடு வரி விதிப்பிற்குட்பட்டிருந்த வணிகச் சின்னமிட்டு சிப்பமாக்கப்பட்ட (Packed) பச்சைக் காய்கறிகள் மற்றும் கனிகள்;

**8.4** OPC மற்றும் PPC சிமெண்ட் விற்பனை விலை 50 கிலோ உள்ள மூட்டைக்கு ( வரி உட்பட) முறையே ரூ 145/– மற்றும் ரூ 135/– க்கு மேலே இருப்பின் அவ்விற்பனை மீது 24 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது. இவ்வகையிலான சிமெண்ட்டின், இரண்டாவது மற்றும் அதன்பின் நடைபெறும் விற்பனை மீது 5 விழுக்காடு வரி விதிக்கப்படும். மேற்கூறப்பட்ட விற்பனை விலைக்கு கீழே விற்கப்படும் சிமெண்ட்டின் மீது தற்போதுள்ள வரி விகிதப்படி முதல் விற்பனையில் 16 விழுக்காடும், இரண்டாவது மற்றும் இதர விற்பனையில் 1 விழுக்காடும் வரி விதிக்கப்படும்.

## 9 கூடுதல் வருவாயைப் பெருக்குவதற்காக வழிமுறைகள்

**9.1** இரண்டாவது மற்றும் இதர விற்பனையாளர்களின் மறுவிற்பனை மீது ஒரு விழுக்காடு விற்பனை வரி விதிக்கப்படும். இவ்வரி விதிப்பு அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள், பெட்ரோலிய பொருட்கள் மற்றும் இதர அறிவிக்கப்பட்ட பொருள்கள் நீங்கலாக

அனைத்து பொருட்களுக்கும் பொருந்தும். வணிகர்களின் விற்று முதல் ஓராண்டிற்கு ரூபாய் பத்து இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், மறு விற்பனை வரி விதிக்கப்படமாட்டாது.

**9.2** ஆண்டிற்கு ரூபாய் பத்து இலட்சம் முதல் ரூபாய் 25 இலட்சம் வரை விற்று முதல் உள்ள உணவு விடுதிகள் மீது இணக்க விகித வரியாக ரூ 12,000/- விதிக்கப்பட்டுள்ளது.

**9.3** ஒரு பட்டுப் புடவையின் கொள்முதல் மதிப்பு ரூபாய் 3000/- க்கு மேற்பட்டு இருப்பின், ஒரு விழுக்காடு ஆடம்பர வரி விதிக்கப்படும்.

**9.4** அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் அறிவிக்கப்பட்ட பொருள்கள் தவிர்த்து ஏனைய பொருட்களின் மீது தமிழ் நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் கீழ் செலுத்தப்படும் விற்பனை வரி மீது 5 விழுக்காடு உள் கட்டமைப்பு உபவரி (Infrastructure Surcharge) விதிக்கப்படும்.

## 10 சட்டம் மற்றும் நடை முறை மாற்றங்கள்

### 10.1 சுய வரிவிதிப்பு திட்டம்:-

ஆண்டிற்கு பத்து கோடி ரூபாய் வரை விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, சுய வரிவிதிப்பு திட்டம் சில மாற்றங்களுடன் விரிவு படுத்தப்பட்டுள்ளது. அனைத்து வணிகர்களுக்கும் பொருந்தும் நிபந்தனைகள் :

i) 31 அக்டோபர் அன்றோ அதற்கு முன்னரோ நமுனாக்கள் உரிய உறுதிமொழி படிவங்களுடன் சமர்ப்பித்தல்.

ii) மேல் முறையீடு, மறு ஆய்வு மற்றும் நீதி பேராணை தவிர்த்து வரி நிலுவைகள் கூடாது.



iii) வணிகம் முதலாண்டு அல்லது இறுதியாண்டில் இருக்கக்கூடாது.

iv) வணிகரின் வரி விதிப்புக்கு உட்பட்ட தொகை முந்தைய ஆண்டை விட குறைந்தது 10 விழுக்காடு உயர்ந்து இருக்க வேண்டும்.

எனினும், ஆண்டு விற்பனைத் தொகை 40 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாமல் உள்ள வணிகர்கள் மேற்கண்ட நிபந்தனைகளுடன், விலை மதிப்பீட்டுக் கணக்கர்/ பட்டயக் கணக்கர் கணக்குகளை தணிக்கை செய்த சான்று பெறப்பட வேண்டும். ஒரு கோடி ரூபாய் அல்லது அதற்கு மேல் விற்று முதல் உள்ள வணிகர்களுக்கு மேற்கண்ட நிபந்தனைகளுடன் அவ்வணிகர்கள் முந்தைய ஆண்டு செலுத்திய வரியைக்காட்டிலும் 15 விழுக்காடு வரி கூடுதலாக செலுத்தி இருக்க வேண்டும். இப்புதிய வழி முறைகள் 2001-2002 வரிவிதிப்பு ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும்.

### 10.2 பதிவுச் சான்று புதுப்பித்தல்.

- பதிவுச் சான்று கட்டண விகிதங்களை மாற்றியமைக்கவும், அடுத்த ஆண்டிற்கான பதிவுச் சான்று நடப்பு ஆண்டில் மார்ச் 31 க்கு முன்பும், தண்டத் தொகையுடன் ஏப்ரல் 30 வரையும் புதுப்பிக்க வகை செய்யப்பட்டுள்ளது.
- .2002-2003 ஆண்டிற்கு, தண்டத் தொகை இல்லாமல் ஏப்ரல் 30 வரையிலும், தண்டத் தொகையுடன் ஆகஸ்ட் 31 வரையிலும் புதுப்பிக்கலாம்.

**10.3** முதல் மேல்முறையீட்டு அலுவலரிடம் மேல் முறையீடு செய்யும் போது வணிகர் கட்ட வேண்டிய சர்ச்சைக்குரிய வரியை தற்போதைய 12.5 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்த தமிழ்நாடு பொதுவிற்பனை வரிசட்டத்தின் கீழ் உரிய திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளது.

10.4 முதல் மேல் முறையீட்டு அலுவலரின் மீட்டனுப்புகை ஆணையை எதிர்த்து தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் கீழ் வணிகரோ அல்லது துறையோ இரண்டாவது மேல் முறையீடு செய்யும் தற்போதுள்ள வழிமுறை நீக்கப்படவுள்ளது. மேலும், முதல் மேல்முறையீட்டு அலுவலரின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு தொடர்பான சர்ச்சைக்குரிய வரி வசூலினை தடை செய்து பிறப்பிக்கப்படும் ஆணை, அம்மேல்முறையீடு மீதான இறுதி ஆணை, 180 நாட்களுக்குள் பிறப்பிக்கப் படாவிட்டால், தடை ஆணை தானாகவே ரத்தாகிவிடும்.

10.5 வரி விதிப்பு அலுவலர்களின் அதிகாரங்களை செம்மைப்படுத்தும் வகையில் மிகச்சிறந்த தீர்ப்பின்படி (Best of judgement) இறுதி வரிவிதிப்பு செய்யும் போது மனப் போக்கான வரி விதிப்பினை குறைக்கவும் அதனால் ஏற்படும் வரிநிலுவைகள் குவிதலை தவிர்க்கவும் சில மாற்றங்களை கொண்டுவர வகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி வரி விதிப்பு அலுவலர் ஒரு லட்சத்திற்கு மேல் வரி அதிகரிப்பு செய்ய வேண்டிய மிகச் சிறந்த தீர்ப்பின் அடிப்படையிலான இறுதி வரி விதிப்பு செய்யும் இனங்களில், சம்மந்தப்பட்ட துணை ஆணையரின் முன் ஒப்புதலைப் பெற வேண்டும். இது தொடர்பாக வணிகவரித்துறை செயலர், நிதித்துறை செயலர் மற்றும் வணிகவரித்துறை ஆணையர் அடங்கிய குழுவிற்கு மறு ஆய்வு செய்வதற்கான அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

**வருவாயினை பாதுகாக்க கீழ்கண்ட வழி முறைகள் வகுக்கப்படவுள்ளன.**

10.6 வெளி மாநிலத்திற்கு அனுப்பப்படும் சரக்குகள் மற்றும் அறிவிக்கை செய்யப்பட்ட பொருட்களுக்கு



துறையால் வழங்கப்படும் படிவம் **20** பயன்படுத்துவதை கட்டாயமாக்கப்படவுள்ளது.

10.7 பணி ஒப்பந்தக்காரர்களைப் பொறுத்தமட்டில், ஒப்பந்தக்காரர் வரி பிடித்தம் செய்யாமலிருந்தாலோ, பிடித்தம் செய்த வரியினை செலுத்தாமலிருந்தாலோ ஒப்பந்தக்காரரிடம் அத்தொகையை வசூலிக்க சட்டத்தில் வழிவகை செய்யப்படவுள்ளது.

## 11. குறிப்பிட்ட வரி நிலுவை இனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் வழிமுறைகள்

### 11.1 சமாதானத் திட்டம் 2002

தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் சர்ச்சைக்குரிய வரிகுறித்து ஒரு புதிய சமாதான திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டம் 3 மாத காலத்திற்கு மட்டும் நடை முறையிலிருக்கும்.

### 11.2 தீர்வாணையம்

இந்த ஆணையம், நிலுவையிலுள்ள வரி, உபரி வரி, கூடுதல் வரி, மற்றும் தண்டம் ஆகியவற்றை கீழ்கண்ட இனங்களில் தீர்வு செய்யும்.

1) 1.4.1995 க்கு முன்பு வணிகத்தை நிறுத்திவிட்ட, 28.2.2002 அன்று மேல் முறையீடு ஏதும் நிலுவையில் இல்லாததுமான வணிகர்களின் வரி நிலுவை இனங்கள்
2) 1.4.1996 முந்தைய வரிவிதிப்பு ஆண்டுகளுக்குரிய பரிசுசீட்டு வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய வரி நிலுவைகள்
3) பொதுத்துறை நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் / கழகங்கள், மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் சம்பந்தப்பட்ட சர்ச்சைகள்

4) 28.2.2002 அன்று மேல் முறையீடு நிலுவையில் இல்லாத இனங்களில், 1.4.1999–க்கு முந்தைய வரி விதிப்பு ஆண்டுகளுக்குரிய வரி நிலுவையினை கைவிடுதல் குறித்த (Waiver) கோரிக்கைகள்.

**12 தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான சலுகைகள்**

12.1 மதிப்பு கூட்டு வரி முறையினை செயல்படுத்துவதற்கான ஆயத்த நிலையை கருத்தில் கொண்டு முதல் கட்டமாக கீழ் கண்ட பொருட்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தமிழ் நாடு விற்பனை வரி மற்றும் மத்திய விற்பனை வரி சட்டங்களின் கீழ் இப்பொருட்களை தயாரிப்பதற்கான (எரி பொருள் நீங்கலான) உள்ளீட்டு பொருட்கள், உறுப்புகள் மற்ற உதிரி பாகங்களின் மீது படிவம் 17 ன் கீழ் செலுத்தியுள்ள வரியினை முழுவதுமாக ஈடுகட்டி கொள்ளலாம் :

1) 10 விழுக்காடு வரி விதிப்புக்கு உட்படும் காகித ஆலை பொருட்கள்.
2) 10 விழுக்காடு வரி விதிப்புக்கு உட்படும் அச்சிடப்பட்ட பொருட்கள் (பேப்பர் மற்றும் இங்க் மட்டும்).
3) 12 விழுக்காடு வரி விதிப்புக்கு உட்படும் மின் மற்றும் மின்னணு பொருட்கள் .
4) 10 விழுக்காடு வரி விதிப்புக்கு உட்படும் இயந்திரத்தில் செய்யப்படும் தீப் பெட்டிகள்.
5) 12 விழுக்காடு வரி விதிப்புக்கு உட்படும் கையினால் செய்யப்படும் சோப்புகள்

இச்சலுகையானது, ஒப்படைப்பு விற்பனைக்கு (Consignment Sales) அனுப்பப்படும் பொருள்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

4 விழுக்காடு மத்திய விற்பனை வரி செலுத்தியுள்ள இனங்களில் மட்டும், செலுத்தப்பட்ட மத்திய விற்பனை வரியில் 50 விழுக்காடு வரை ஈடுகட்டி கொள்ளலாம். தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரி சட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையில்



நடைபெறும் விற்பனைகளுக்கு மேற்கூறிய ஈடுகட்டும் சலுகை கிடையாது.

**கீழ்க்கண்ட சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன :–**

12.2 அச்சடிக்கப்பட்ட பொருட்களுக்கு விற்பனை அல்லது ஒப்பந்த பணி எதுவாயினும் , மொத்த தொகையில் 3 விழுக்காடு இணைக்க விகிதவரி விதிக்கப்படும். இந்த இணைக்க விகிதவரி இனங்களுக்கு வரி ஈடுகட்டும் சலுகை இல்லை.

12.3 தமிழ்நாடு அரசு துறைகள் மற்றும் கீழ்கண்ட அரசு பொதுத்துறை நிறுவனங்கள் / தன்னாட்சி நிறுவனங்களுக்கு, முதல் அட்டவணையிலுள்ள பெட்ரோல், டீசல், மற்றும் சிமெண்ட் நீங்கலான பொருட்கள் விற்பனை செய்யும் போது, 4 விழுக்காடு சலுகை வரி சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு விதிக்கப்படும்:–

1. தமிழ்நாடு மின்சார வாரியம்
2. தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம்
3. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம்
4. மாநில போக்குவரத்து கழகங்கள் (நேரடி கொள்முதல் மட்டும்)
5. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் (நேரடி கொள்முதல் மட்டும்)
6. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் (நேரடி கொள்முதல் மட்டும்)

12.4 தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் ஆகிய நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான டர்ன்–கீ (Turn Key) முறையில் செய்யப்படும் விற்பனைக்கு 4 விழுக்காடு சலுகை வரி விதிக்கப்பட்டுள்ளது.

12.5 சர்க்கரை கழிவினை மூலப்பொருளாக கொண்டு மருந்து மற்றும் வேதிப் பொருட்கள் தயாரிக்கும் தமிழ்நாட்டில் உள்ள, அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்யப்படும் சர்க்கரை கழிவின் மீது குறிப்பிட்ட உறுதி மொழி படிவத்தின் அடிப்படையில் 20 விழுக்காடாக குறைத்து வரி விதிக்கப்படும்.

12.6 இரப்பர் தொழில் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில்தமிழ் நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் கீழ் செலுத்தப்படும் கொள்முதல் வரியில் இயற்கை இரப்பர் மீது செலுத்தப்பட்ட மத்திய விற்பனை வரியினை ஈடுசெய்து கொள்ளலாம்

12.7 சேலத்திலுள்ள திருவாளர்கள் சேகோ சர்வ் என்ற நிறுவனத்திற்கு கூடுதல் விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.. இருப்பினும் சேகோ மற்றும் ஸ்டார்ச்க்கு விற்பனை வரி 2 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

12.8 எண்ணெய் நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் லூப் எண்ணெய் ( Lube Base Oil) மீதான கொள்முதல் வரியில் 7 விழுக்காடு வரை ஈடுகட்டி கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. .

12.9 சிறு தொழில்கள் பயன் பெறும் வகையில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்படும் பாரபின் மெழுகிற்கு ( Paraffin Wax) 4 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது.

12.10 மின் கட்டுப்பாட்டுப் பலகைகள், மூலதனப் பொருள்களாகக் கருதப்பட்டு அவைகளின் மீது சலுகை வரியாக 3 விழுக்காடு விதிக்கப்பட்டுள்ளது.

## <u>13 இதர அம்சங்கள்</u>

13-1 ~~12.11~~ வரைமுறைகளை பூர்த்தி செய்துள்ள வணிகர்களை பொறுத்தமட்டிலும் 1998-1999 வரிவிதிப்புஆண்டு முடிய நிலுவையிலுள்ள வரி விதிப்புகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நமூனாபடி வரி



செலுத்தியுள்ள, மேலும் முதலாண்டு வணிகராகவோ, கடைசியாண்டு வணிகராகவோ இல்லாத அனைத்து வணிகர்களுக்கும் பொருந்தும். மேலும், அவ்வணிகர்கள் முந்தைய ஆண்டுகளுக்கு மேல்முறையீடு, மறு ஆய்வு மற்றும் நீதிப் பேராணை ஆகியவற்றிற்கு உட்படாத வரி நிலுவை ஏதும் இல்லாதவர்களாகவும், அனைத்து நமூனாக்களையும், உறுதி மொழி படிவம் மற்றும் சான்றிதழ்களையும் 30.9.2002–க்குள் சமர்பித்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். உறுதிமொழி படிவங்களை தாக்கல் செய்ய இயலாத வணிகர்கள் அதற்கு பதிலாக அறிவிக்கை செய்யப்பட்ட மாற்று அத்தாட்சிகளை சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுவர். அவ்வாறான நிகழ்வுகளில் மத்திய விற்பனை வரி சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வரி விகிதத்திற்கு மேலாக 2 விழுக்காடு பிழை பொருத்தல் கட்டணமாக செலுத்த வேண்டும். வரி விதிப்பிற்கு உட்படாத வணிகர்கள் 2000–2001 முடியவுள்ள வரிவிதிப்பு ஆண்டுகளுக்கு 30.9.2002 –க்குள் அவ்வாண்டுகளுக்கான நமூனாக்களை தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டு, வரிவிதிப்பு பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இல்லாவிடில் பதிவுச் சான்று ரத்து செய்யப்படும்.

13.2 தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச்சட்டம் 2001ன் கீழ் ஏற்கனவே அறிவிக்கை செய்யப்பட்ட வெள்ளை சிமெண்ட மற்றும் ரெப்ராக்டரி சிமெண்ட் உள்ளடங்கிய சிமெண்ட் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்டு, 17 புதியவகை பொருட்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

13.3 (அ) சுயேச்சையான மின் உற்பத்தியாளர்கள் இறக்குமதி செய்யும் எல்.எஸ்.எச்.எஸ்.( Low Sulphur Heavy Stock ) மீது விதிக்கப்படும் நுழைவு வரி, ஓராண்டு காலத்திற்கு 3 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

ஆ) மறு விற்பனைக்கு அல்லது வெளி மாநில விற்பனைக்கு, அட்டவணை பொருட்களை

கொண்டு வரும் குறிப்பிட்ட எண்ணெய் நிறுவனங்களுக்கு நுழைவு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

13.4. ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிடித்தம் செய்த வரித்தொகையை துறைக்கு செலுத்துவதை கண்காணிக்க மையப்படுத்தப்பட்ட பிரிவு ஒன்று சென்னையில் அமைக்கப்படும். அவ்வாறு மாதந்தோறும் பிடித்தம் செய்யப்பட்ட தொகை அடுத்த மாதத்தில் 12 ஆம் நாள் செலுத்தப்பப்பட வேண்டும்.

13.5. விளம்பர வரி சட்டத்தின் நோக்கம் விரிவாக்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

## 14. துறையின் பிற சிறப்பு அம்சங்கள்

### 14.1 கணினிமயமாக்குதல்

தற்போதுள்ள 323 வரி விதிப்பு வட்டங்களில், 140 வரி விதிப்பு வட்டங்கள், 18 உதவி ஆணையர் அலுவலகங்கள், 5 துணை ஆணையர் அலுவலகங்கள், 6 மாநில எல்லைத் தணிக்கைச் சாவடிகள், அரசு செயலர் அலுவலகம் மற்றும் வணிகவரி ஆணையர் அலுவலகம் ஆகியவை ரூ 3.57 கோடி செலவில் கணினிமயமாக்கப் பட்டுள்ளன. வணிக வரித் துறை முழுவதும் கணினி மயமாக்குவதற்கான ஒரு விரிவான திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. வணிக வரித்துறையின் பொது விவரங்களான பதிவு செய்யும் நடைமுறை, வரி செலுத்தும் வகை, தற்போதைய வரி விகிதம் ஆகியவை ***www.tnsalestax.com*** என்ற வலை தளத்தில் உள்ளன.

### 14.2 சோதனைச் சாவடிகள் ஒருங்கிணைப்பு

வணிக வரித்துறை, போக்குவரத்துத் துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து நவீன ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.



### 14.3 மாநில மற்றும் மாவட்ட நிலையிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள்

விற்பனை வரி ஆலோசனை குழுக்கள் அரசால் மாநில மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்படுகின்றன. மாநில அளவிலான குழு மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் மற்றும் வணிகர்கள், வணிகவரித்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு செயல்படுகிறது. மாவட்ட அளவில் இக்குழு, மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும் மற்றும் வணிகர்கள், வணிகவரித்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு செயல்படுகிறது. வணிக வரித்துறை நிர்வகிக்கும் சட்டங்களின் நடைமுறை விளக்கங்கள் மற்றும் வணிகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இக்குழுக்களில் ஆய்வு செய்யப்படுகிறது. மாநில மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 14.4 குறை தீர்க்கும் குழு

வணிகர்கள் தங்களது குறைகளைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கும் வகையில், வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் பிரிவு ஒன்று செயல்படுகிறது. இக்குழு இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களை தலைவராகவும் இணை ஆணையர் (சுய சீராய்வு மனு) மற்றும் இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது.

## 15. தமிழ்நாடு வணிகர் நல வாரியம்.

வணிகர்களின் நலனுக்காகவும் மற்றும் அவர்களுக்கு சிலவகையான உதவிகள் வழங்குவதற்காகவும் வணிகர் நல வாரியம் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் 31.3.2002

அன்று **39,616** உறுப்பினர்கள் உள்ளனர். இவ்வாரியத்தின் தற்போதைய உறுப்பினர் கட்டணம் (ஒரு முறை மட்டும்) ரூ.**250/–**. உறுப்பினர் கட்டணமாக இதுவரை மொத்தம் ரூ.**70.65** லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாரியம் நலத்திட்டமாக உறுப்பினர்களுக்கு குடும்ப நலம், கல்வி, மருத்துவம் மற்றும் விபத்து நிவாரணம் போன்றவற்றிற்கு உதவித் தொகை வழங்கி வருகிறது. தமிழ்நாடு வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டபொழுது அரசின் பங்களிப்பு ரூ. **2** கோடி ஆகும். மேலும் இதுவரையில் ரூ **35.49** இலட்சம் ஈடான மானியமாகவும் அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் உறுப்பினர் சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வாரியத்தின் செயல்பாடு மற்றும் நல உதவிகள் குறித்து மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தேவைக்கேற்ப மேன்மைப்படுத்தப்படும்.

**செ.ம.வேலுசாமி**

தொழில் மற்றும் வணிகவரித்துறை அமைச்சர்